**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 59/2023** **தேதி: 03.09.2025**

**பி.வா.சா.1 – போதும்பொண்ணு**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

என் மாமனார் பெயர் பெரியகருப்பத்தேவர். அவரின் மகன் சக்திவேல்தேவர். இன்னொரு மகன் 1–ம் பிரதிவாதி கதிரேசன் என்றால் சரிதான். தாவா சொத்து முதலில் எனது மாமனார் அடங்கிய பொதுக்குடும்ப சொத்தாக இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண்.27/16 என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம் 74 செண்ட் என்றால் சரிதான். அதில் தென்புறம் பாதிக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெரியகருப்பத்தேவரும், எனது கணவரும் சேர்ந்து 1962–ல் சுப்பிரமணியத்தேவருக்கு கிரையம் கொடுத்தார்களா என்றால் சுப்பிரமணியத்தேவரும், பெரியகருப்பத்தேவரும் நண்பர்கள். அதனால் பெரியகருப்பத்தேவர் சும்மா சுப்பிரமணியத்தேவருக்கு கிரையம் கொடுத்தார். அந்த கிரையப்பத்திரத்தில் எனது கணவரை மைனராக காட்டி எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 மேற்குறிப்பிட்ட கிரைய பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. சுப்பிரமணியத்தேவர் கிரையம் வாங்கிய சொத்தை எனது மாமனாருக்கே எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே விட்டு கொடுத்துவிட்டார். எனக்கு திருமணம் ஆகி 35 வருடங்கள் ஆகிறது. எனக்கு திருமணம் ஆவதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு விட்டுக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எழுத்து மூலமாகவா அல்லது வாய்மொழி மூலமாகவா விட்டுக் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது எதிர்வழக்குரையில் எந்த இடத்திலும் சுப்பிரமணியத்தேவர் தாவா சொத்தை கிரையம் வாங்கிய பின்பு எனது

மாமனாருக்கே திரும்ப விட்டுக்கொடுத்துவிட்டார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது மாமனார் எதிர்வழக்குரையில் சுப்பிரமணியத்தேவருக்கு சும்மா தான் எழுதிக் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்தின் வடக்கே உள்ள சொத்தில் செட்டு போட்டு இடிந்துவிட்டது. கிரையம் வாங்கிய சுப்பிரமணியத்தேவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சும்மா என்பது பணம் கொடுக்காமல் வாங்கியதா என்றால் எனக்கு தெரியாது. சுப்பிரமணியத்தேவருக்கு சுப்பிரமணி (1), போஸ் (2) ஆகிய இரண்டு மக்கள் என்றால் சரிதான். சுப்பிரமணியத்தேவர் மகன் சுப்பிரமணி இறந்துவிட்டார். போஸ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். போஸ் என்பவரின் மனைவி கமலம். கமலம் மகள் கார்த்திகைச்செல்வி என்றால் சரிதான். ஆனால் போஸ்சுக்கு பிறக்கவில்லை. கார்த்திகைச்செல்வி பிறக்கும் பொழுது எனக்கு 15 வயது இருக்கும். நான் எனது அப்பா வீட்டில் இருந்தேன். போஸ் குடும்பத்தில் என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கார்த்திகைச்செல்வியின் பிறப்புச்சான்றிதழ், பள்ளிச்சான்றிதழ், வாக்களார் அட்டை, ஆதார் ஆட்டை ஆகியவற்றை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர் எங்கள் ஊரில் இல்லை. இந்த வழக்கில் கார்த்திகைச்செல்வி மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் கார்த்திகைச்செல்வியின் அப்பா பெயர் போஸ் என்று உள்ளதை பார்த்து எனது வழக்கறிஞர் சொன்னார். கார்த்திகைச்செல்வி யாருக்கு பிறந்தார் என்பது எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே உள்ள சொத்து சம்பந்தமாக சேகர் என்பவர் வாதியாக இருந்து, என் மீதும், கார்த்திகைசெல்வி மீது O.S.109/2015 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் சேகருக்கு ஆதரவாக நான் நீதிமன்றத்தில் ஆஜராக சாட்சி சொன்னேன் என்றால் சரியல்ல. நான் சாட்சி சொல்லவில்லை. அந்த வழக்கில்

நான் பிரதிவாதி என்ற முறையில் சாட்சி சொல்லவில்லை. O.S.109/2015 வழக்கில் பிரதிவாதி தரப்பு 3 வது சாட்சியாக நான் சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சாட்சி சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது O.S.109/2015 வழக்கில் நான் அளித்த சாட்சியம் என்றால் சரியல்ல. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. நான் முதல் முறையாக தற்பொது தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். கரிசல்குளம் தொடக்க கூட்டுறவு வங்கி செயலாளர் மீது O.S.319/2012 வழக்கு நான் போட்டேனா என்றால் நான் போடவில்லை, அவர்கள் தான் வழக்கு போட்டார்கள். சேகர் வாதியாக தாக்கல் செய்த O.S.109/2015-ல் நான் 6-ம் பிரதிவாதியாக இருந்தது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கதிரேசனுக்கு இரண்டு மனைவிகள். நான் இரண்டாவது மனைவி. முதல் மனைவியின் பிள்ளைகளுக்கு தாவா சொத்தில் தற்போது பாத்தியம் இல்லை. அவர்கள் எனக்கு எழுதி வைத்துவிட்டார்கள். முதல் மனைவியின் பிள்ளைகள் பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். பெரியகருப்பத்தேவர் சும்மா எழுதிவைத்த பத்திரத்தை ரத்து செய்வதற்கு நானோ, எனது கணவரோ, என் மாமனாரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எடுக்கவில்லை. எங்கள் பெயரில் உள்ள சொத்து என்பதாலும், நாங்கள் உழவடை செய்து வருவதாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என் மாமனார் எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் சும்மா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்று எனக்கு 2010-ல் தான் தெரியும். எனக்கு தெரிந்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் வழக்கு போட்டதால், நான் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த வழக்கில் நான் எதிர்கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் எதிரிடை அனுபவ பாத்தியம் கேட்கிறேனா என்றால் கேட்கவில்லை. தாவா சொத்து எங்களது பூர்வீக சொத்து. தாவா சொத்து வாதிக்கு தான் பாத்தியம் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>சார்பு நீதிபதி,<br>அருப்புக்கோட்டை. |